[5th February 1966

திரு. செ. மாதவன் : கல்கி, சுவராஜ்யா இந்த இரண்டு பத்திரிகைகளின் மீது நடவடிக்கைகள் எடுத்தவுடன் மத்திய அரசாங்கம் அதுபற்றி நம் மாநில அரசாங்கத்தினிடம் ஏதாவது கேட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கம் இதைச் செய்யவேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் அவ்வாறு தலையிடவும் மாட்டார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ராஜாஜி அவர்கள் வீட்டுக்கு முதல் அமைச்சர் அவர்கள் செல்லவில்லை என்று சொன்னார்கள். ஆனால் ராஜாஜி அவர்களின் இல்லத்திற்கு முதல் அமைச்சர் அவர்கள் போனதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. ஆனால், வேறு விஷயங்கள் பற்றிப் பேசியிருக்கலாம், அப்படித்தானே ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படித்தானே, இப்படித்தானே என்று தெரியாது. ராஜாஜி அவர்களை நான் ஒன்றும் கேட்கவில்லை என்று சொன்னேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்கி, சுவராஜ்யா பத்திரிகைகளின் மீது போடப்பட்ட வழக்குகள் ஏதாவது நிபந்தனையின் பேரில் வாபஸ் வாங்கப் பட்டனவா ? அவற்றை வாபஸ் பெறுவதற்கு நிபந்தனை ஏதாவது விதிக்கப்பட்டதா இல்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராஜாஜி அவர்கள் கடிதம் எழுதிய பிறகு அதை ஆராய்ந்து இனி இதைத் தொடர்ந்து நடத்த வேண்டியதில்லை என்ற கருத்து ஏற்பட்டு அவ்வாறு வாபஸ் வாங்கிக் கொண்டோம்.

திரு. எஸ். முருகையன் : இது சம்பந்தமாக ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சர் அவர்களைக் காண விரும்பினரா அல்லது முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய விளக்கத்தைப் பெற அவர்கள் வீட்டிற்குச் சென்றார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராஜாஜி அவர்கள் என்னைக் காண விரும்பியது உண்மைதான். ராஜாஜி அவர்களை நான் சந்தித்துப் பேசியதும் உண்மைதான். இதைச் செய்யவேண்டும், அதை செய்யவேண்டும் என்று நானும் கேட்கவில்லை, அவரும் கேட்கவில்லை.

அனல் மின்சாரத் திட்டம்

* 111. கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. கே. மாதா கவுடர் : } கனம் கைத்தொழில் அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்திற்குத் திட்டக் குழுவும் மத்திய அரசும் அனுமதி அளித்துவிட்டார்களா ?

(இ) அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

5th February 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) : The clearance of the Government of India is awaited for taking up the Scheme.

திரு. சே. மாதவன் : இந்த அனல் மின்சாரத் திட்டத்திற்கு அனுமதி கொடுப்பதில் நம் சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் ஏதாவது கருத்து வேறுபாடு ஏற்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கருத்து வேறுபாடு இல்லை. நாம் இந்தத் தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தை உடனடியாக இந்த மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று விரும்பினோம். அதற்கு அவர்கள் அனுமதி இன்னும் கொடுக்கவில்லை. இதுதான் நிலைமை.

திரு. ஜே. மாதா கவுடர் : தற்போது நாம் மழையை நம்பி நம் மின்சாரத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு மழை பெய்யாத காரணத்தினால் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இதை எல்லாம் மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச் சொல்லி அனல் மின்சார நிலையம் ஏற்பட்டால் தான் இதை ஓரளவிற்குக் கவனிக்க முடியும் என்ற நிலைமையை அவர்களிடம் வற்புறுத்தி நான்காவது திட்ட முதல் ஆண்டிலேயே இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள முயற்சி செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

Production of Titanium

* 112. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to set up a plant in public or private sector for production of "Titanium" and "Titanium products" ?

THE HON. SRI R. VENKATARAMAN : A private entrepreneur has been granted a letter of intent to set up an industrial undertaking to manufacture Titanium products and pig iron utilising the ilmenite sands at Manavalakurichi. Two others have applied to the Government of India for licences to set up ilmenite enriching plants. The applications are under consideration. There is no proposal to set up a plant in the Public Sector.

திரு. சா. கணேசன் : இந்த இரண்டு நிறுவனங்களும் எந்த நாட்டைச் சேர்ந்தவை ? அந்த நிறுவனங்களின் பெயர் என்ன என்று அறிய விரும்பலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் நாட்டினுடைய தொழில் அதிபர்கள்தான் அப்ளிக்கேஷன்ஸ் போட்டிருக்கிறார்கள். நம் நாட்டைச் சேர்ந்தவருக்குத்தான் ஒரு அனுமதி, 'லெட்டர் ஆஃப் இன்டென்ட்' கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற இருவர்களின் அப்ளிக்கேஷன்ஸ் இன்னும் பரிசீலனையில்தான் இருக்கின்றன.